## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்–கல்வி உதவித் தொகை – 2022–2023 ஆம் ஆண்டிற்கான கல்வி உதவி தொகை – 02.08.2022 அன்று நடைபெற்ற நேர்காணலில் தேர்வு செய்த மாணாக்கர்கள் அயல் நாடு சென்று உயர் கல்வி பயிலும் திட்டத்தின் கீழ் கல்வி உதவி தொகைக்கான செலவினம் ரூ.1,99,33,542/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந3(1)துறை**

அரசாணை (நிலை) எண்.89

நாள்: 30.09.2022
சுபகிருது, புரட்டாசி மாதம் 13–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2053
படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.70, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3)துறை, நாள்:08.08.2002.
2. அரசாணை (நிலை) எண்.106, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3)துறை, நாள்: 14.12.2021.
3. அரசுக் கடித எண்.10041/ஆதிந3(1)/2022-1, நாள்: 06.06.2022.
4. ஆணையர், ஆதிதிராவிடர் நலம் அவர்களின் கடித ந.க.எண்.ஐ1/19821/ 2021, நாள்.04.08.2022.

***************

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ / மாணவியர்கள் அயல்நாடு சென்று உயர்க்கல்வி பயில புதிய விதிமுறைகள் ஏற்படுத்தி ஆதிதிராவிடர் நல இயக்குநர் மூலம் செயல்படுத்திட ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இன மாணாக்கர்களுக்கு அயல்நாடு சென்று உயர்கல்வி பயில்வோருக்கான கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் மறுசீரமைக்கப்பட்டு, TOEFL / IELTS / GRE மற்றும் GMAT ஆகிய தகுதி தேர்வுகளை உள்ளடக்கிய திட்டப்பகுதி–1–இல் ஒவ்வொரு தகுதி தேர்விற்கும் 125 மாணாக்கர்கள் வீதம் அனைத்து தகுதி தேர்வுக்கும் 500 மாணாக்கர்களுக்கு ரூ.1.64 கோடி செலவில் பயிற்சி வழங்கவும், மாணாக்கர்கள் தாம் விரும்பும் நாட்டின் கல்வி நிறுவனத்தின் மேல் படிப்பினை தொடர்வதற்கு கல்வி உதவித்தொகை தோராயமாக ரூ.36.00 இலட்சம் வீதம் பத்து மாணாக்கர்களுக்கு

ரூ.3.60 கோடி செலவினத்தில், அயல்நாடு சென்று கல்வி பயில உதவித் தொகை வழங்கும் திட்டம், திட்டப்பகுதி-2-ஆகவும் செயல்படுத்த மொத்த செலவினம் ரூ.5.24 கோடிக்கு (2021-2022) ஆண்டிற்கு நிருவாக ஒப்பளிப்பு வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. பார்வை 3-இல் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் அயல்நாடு சென்று உயர்கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை திட்டத்திற்கான புதிய வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கும் வரை பார்வை 1-இல் படிக்கப்பட்ட அரசாணையின்படியே நடவடிக்கை எடுக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

4. பார்வை 4-இல் படிக்கப்பட்ட ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடிதத்தில் அயல்நாடு சென்று உயர்கல்வி பயில்வதற்கான கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் 08.08.2022 வரை விண்ணப்பித்திருந்த 24 மாணாக்கர்களில் கீழ்க்காணும் 9 மாணாக்கர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்க இத்திட்ட தேர்வுக் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே கீழ்க்காணும் 9 மாணாக்கருக்கு கல்வி உதவித் தொகை வழங்க உத்தேச செலவினமாக ரூ.1,99,33,542/-ஐ ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| Sl. No. | Student's Name | Course going to be pursued in abroad | University |
|---|---|---|---|
| 1. | P.Subitsha | LLM FT Commercial and Corporate Law | Queen Mary University, London |
| 2. | M.R.Sriman Ram (Father attended) | M.Sc. Advanced Manufacturing | University of Portsmouth, UK |
| 3. | N.P.Vignesh | M.Sc. Food Science and Innovation | University of Manchester Metropolitan |
| 4. | Sujith Selvan | Master of Engineering Management | University of Leicester |
| 5. | P.Divagaran | M.Sc. Structural Integrity | Brunel University, London |
| 6. | Dharani Selvaraj | Ph.D. in International area Studies | Hankuk University of Foreign Studies, South Korea. |
| 7. | Jegan Murugaiyan | MBA | Nottingham Trent University |
| 8. | Pari Vallal | M.Sc. Renewable Energy Systems Engineering | University of Surrey |
| 9. | P.Pavithra | MBA | University of Toledo |
| | Total | | |

5. மேலே பத்தி 4-இல் விவரித்தவாறு, ஆதி திராடவிடர் நல ஆணையரின் பரிந்துரையை கவனமுடன் அரசு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, மேற்கண்ட 9 மாணாக்கர்களுக்கு பார்வை 1-இல் காணும் அரசாணையின் நெறிமுறையின்படி கல்வி உதவித் தொகை வழங்க ரூ.1,99,22,542/-ஐ 2022-2023-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட நிதியோதுக்கீட்டிலிருந்து ஒப்பளிப்பு செய்து இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கி ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படுதல் வேண்டும்.

"2225-ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் 01-ஆதிதிராவிடர் நலன் 277-கல்வி மாநிலச் செலவினங்கள் KH-ஆதிதிராவிடர் வகுப்பு மாணவர்கள் உயர்கல்விக்காக வெளிநாடு செல்வதற்கான படிப்புதவித் தொகை 312-படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் 02-மெட்ரிக் படிப்புக்கு மேல்படிப்பு"
IFHRMS த.தொ.கு. 2225 01 277 KH 31202

7. மேலே பத்தி 5-இல் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை விவரத்தினை அரசுக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநரைக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.43328/2022/ஆதி(ம)பந/2022, நாள்.21.09.2022-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**தென்காசி சு ஜவஹர்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**<u>பெறுநர்</u>**
✓இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக்கழகம், சென்னை-600 018.
மாநில கணக்காயர், சென்னை - 600 006/18/35
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை - 600 001/05
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை - 600 009.

**<u>நகல்</u>**
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலஅமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
அரசு கூடுதல் தலைமைச்செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை-600 009.
அரசு கூடுதல் செயலாளரின், நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
நிதி (ஆதி(ம)பந)த்துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

30/9/2022

பிரிவு அலுவலர்

30.09.2022